(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 164.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2012 பெப்புருவரி 08, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1065/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) முதலீட்டுச் சபை உடன்படிக்கை 16 மற்றும் 17 ஆம் பிரிவுகளின் கீழ் உருவாக்கப்படும் தொழிற்சாலைகள் மூலமாக 2009, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் வேலைவாய்ப்புகளின் மொத்த எண்ணிக்கையை தனித்தனியாக அவர் கூறுவாரா?

(ஆ) (i) புதிதாக உருவாக்கப்பட்ட முதலீட்டுச் சபைக் கம்பனிகள் மூலமாக வருடாந்தம் மேற்கொள்ளக்கூடிய ஏற்றுமதியின் அளவையும்;

(ii) முதலீடுகளை மேற்கொள்ளும் பிரதான நாடுகளையும்;

(iii) வரி செலுத்தத் துவங்கும் காலப்பகுதி முதல், மேற்படி முதலீடுகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் வரித்தொகையின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1167/ ' 11

2.

கௌரவ அனுர திஸாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் ஐ.ஓ.சீ. (IOC) எனும் இந்தியக் கம்பனிக்கு வரி விடுப்பு அடிப்படையில் 100 எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) மேற்படி எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டுமா;

(iii) ஆமெனில், 2006, 2007, 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரியின் பெறுமதி தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எரிபொருள் நிரப்பும் நிலையங்களினால் செலுத்தத் தவறிய வரியை அரசாங்கத்திற்குச் செலுத்துமாறு இலங்கை முதலீட்டுச் சபை ஐ.ஓ.சீ கம்பனிக்கு அறிவித்துள்ளதா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது;

(iii) அக்கம்பனி வரி செலுத்த வேண்டியதில்லையென முதலீட்டுச் சபையின் தவிசாளராலேயே சம்பந்தப்பட்ட கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அத்திகதி யாது;

(v) அத்தகைய அறிவித்தல் வழங்கியமைக்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஐ.ஓ.சீ. கம்பனி அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்த தவறியமைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1399/ '11

3\.

கௌரவ புத்திக பத்திரண,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மொனறாகல மாவட்டத்தின் மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த முல்லேகம மற்றும் நெல்லியத்த கிராமங்களில் குடியமர்ந்துள்ள ஏறக்குறைய இரண்டாயிரம் குடும்பங்கள் மின்சாரம் இன்மையால் கடும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமங்களில் பெரும்பாலான வீடுகளுக்கு இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் சூரியக் கலங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அவை செயலிழந்த நிலையில் உள்ளனவென்பதையும்;

(ii) ஊவா உதானய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இப்பிரதேத்திற்கு மின்சாரம் வழங்கும் பொருட்டு மடுல்ல பிரதேச செயலகத்தினால் மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இற்றைவரை அமுலாக்கப்படவில்லை என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி கிராமங்களிலுள்ள மக்களுக்கு துரிதமாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) அதற்குத் தேவையான நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், அப் பணத்தொகை யாது;

(iv) மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமெனில் அத்திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1491/ '11

4\.

கௌரவ அஜித் குமார,— அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1595/ '11

5.

கௌரவ அஜித் பீ. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'எலியந்த வயிட்' என்ற நபரொருவர் சனாதிபதி ஆலோசகராக பணியாற்றியுள்ளாரா என்பதையும்;

(ii) மேற்படி நபர் வேறேதேனும் அரசாங்க பதவியை வகித்துள்ளாரா என்பதையும்;

(iii) 'எலியந்த வயிட்' என்பவருக்கு அரசாங்கத்தினால் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 'எலியந்த வயிட்' என்பவருக்கு எதிராக பண மோசடி தொடர்பான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1714/ '11

6.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை துறைமுக அதிகார சபையின் பணியாளர்களை ஓய்வுபெறச்செய்யும் திட்டமொன்று துறைமுக அதிகார சபையின் 03/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் வெளியிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகார சபையில் குறைந்தபட்சம் பத்தாண்டு கால சேவையைப் பூர்த்திசெய்துள்ளதும், எதிர்காலத்தில் ஐந்தாண்டு காலம் சேவையாற்றவிருக்கின்றதுமான பணியாளர்களுக்கு இருபது இலட்சம் ரூபா உச்சவரம்பின் கீழ் ஏற்புடைய இழப்பீட்டுத் தொகையைப் பெற முடியும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இலங்கை துறைமுக அதிகார சபையினால் கொழும்புத் துறைமுகத்தின் விஸ்தரிப்பு, அம்பாந்தோட்டை புதிய துறைமுக நிர்மாணிப்பு மற்றும் ஏனைய துறைமுகங்களை விருத்திசெய்யும் பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் துறைமுக அதிகார சபையின் பணியாளர்களை ஓய்வுபெறச்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதன் அடிப்படை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) கடந்த காலத்தில் அரசியல் நிர்ப்பந்தங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட அத்தியாவசியமல்லாத ஆட்சேர்ப்புகள் காரணமாக துறைமுக அதிகார சபையில் ஊழியர் மிகை ஏற்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1718/ '11

7.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சுக்கு சொந்தமான நியதிச்சட்ட சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள தலைவர்கள் யாவரென்பதையும்;

(iii) மேற்படி தலைவர்களை நியமித்துள்ள அதிகாரி யாரென்பதையும்;

(iv) மேற்படி தலைவர்களின் கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவம் யாவையென்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு தலைவருக்கும் செலுத்தப்படுகின்ற சம்பளம், அல்லது கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், தொலைபேசிகள் உள்ளிட்ட வசதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1726/ '11

8.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹிங்குரான சீனித் தொழிற்சாலைக்கு சொந்தமான காணியின் பரப்பளவு யாது;

(ii) அந்நிறுவனத்திற்குச் சொந்தமான ஏனைய ஆதனங்கள் யாவை;

(iii) அந்த ஆதனங்களின் அளவுகள் யாவை;

(iv) தற்போது ஹிங்குரான சீனித் தொழிற்சாலையைச் சார்ந்த வகையில் கரும்பு பயிர் செய்யப்பட்டுள்ள காணியின் பரப்பளவு யாது;

(v) மேற்படி பயிர் செய்யப்பட்ட காணிகளில் நிறுவனத்தினால் பயிர் செய்யப்பட்ட மற்றும் விவசாயிகளால் பயிர் செய்யப்பட்ட அளவுகள் தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பயிர் செய்யப்பட்ட கரும்புகளை மேற்படி தொழிற்சாலை கொள்வனவு செய்கின்றதா;

(ii) ஆமெனில், ஒரு தொன் கரும்பின் விலை யாது;

(iii) தொழிற்சாலையினால் கொள்வனவு செய்யப்படாவிடின் தொழிற்சாலையினதும் விவசாயிகளினதும் கரும்பினைக் கொள்வனவு செய்யும் நிறுவனம் யாது;

(iv) அந்நிறுவனம் ஒரு தொன் கரும்புக்காக செலுத்துகின்ற விலை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஹிங்குரான சீனி உற்பத்தி நிறுவனத்தில் கரும்பு பிழிவதற்கும் சீனி உற்பத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றதா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1803/ ’11

9.

கௌரவ ஆர். எம். ரஞ்ஜித் மத்தும பண்டார,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனமல்வில பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தின், செவனகல பிரதேச செயலாளர் பிரிவில், இந்திகொலபெலெஸ்ஸ கிராம உத்தியோகத்தர் பிரிவின் கெமுனுபுர சுற்றுவட்ட வீதி “கெமுனு விவசாய அமைப்பினால்” மறுசீரமைக்கப்பட்டது என்பதையும்;

(ii) இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து மேற்படி விவசாய அமைப்பு கைச்சாத்திட்டுள்ள உடன்படிக்கைக்கு அமைய 419 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச் சீட்டின் மூலம், நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக ரூ. 801,089.99 பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி வீதியிலேயே 665 மீற்றர், இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின் உடன்படிக்கையின் கீழான வேலைகளுக்கென கெமுனு விவசாய அமைப்பினால் தனமல்வில பிரதேச சபையிடமிருந்து ரூ. 588,858.25 பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைகளுக்கு அமைய ஒரே பணிக்காக இரு நிறுவனங்களிடமிருந்து “கெமுனு விவசாய அமைப்பு” என்ற பெயரில் மோசடியான விதத்தில் நிதி பெறப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி மோசடி நடவடிக்கைக்கு பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1859/ ’11

10.

கௌரவ சிவசக்தி ஆனந்தன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா நகர சபைக்குச் சொந்தமான மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி விற்பனை நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பூந்தோட்டம், குருமன்காடு மற்றும் வவுனியா சந்தைக்கு அருகிலிருக்கும் மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களையும் குருமன்காடு மற்றும் வவுனியா சந்தைக்கு அருகிலிருக்கும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையங்களையும் குத்தகைக்கு வழங்கும்போது கேள்விப்பத்திரங்கள் கோரல் அல்லது பகிரங்க ஏலவிற்பனை நடத்தப்பட்டதா என்பதையும்;

(ii) 2009, 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் மேற்படி ஒவ்வொரு விற்பனை நிலையமும் குத்தகைக்கு வழங்கப்பட்ட தொகை மற்றும் குத்தகை பெற்ற தரப்பினர் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2011.06.29ஆம் திகதி நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தின் அறிக்கைபடி வவுனியா சந்தைக்கு அருகில் அமைந்துள்ள மாட்டிறைச்சி விற்பனை நிலையம் திரு. எஸ். கே. காதர் என்பவருக்கு ரூபா 859,711.05 வுக்கும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையம் திரு. கே. கே. மஸ்தான் என்பவருக்கு ரூபா79,315.50 வுக்கும் கேள்விப் பத்திரங்கள் கோரப்படாமல் குறைந்த தொகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அதன் மூலம் சபைக்கு மேற்படி மூன்று வருடங்கள் தொடர்பிலும் சுமார் ரூபா ஒரு கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அவ்வாறாயின், அதற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களிடமிருந்து குறித்த பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1862/ '11

11.

கௌரவ வசந்த அலுவிஹாரே,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான தோட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) ஊழியர்களை ஆட்சேர்த்தல், நீக்குதல் மற்றும் சேவை நீடிப்பு வழங்குதல் தொடர்பான முழுமையான அதிகாரம் மேற்படி கம்பனியின் நிர்வாகத்துக்கு உள்ளதா என்பதையும்:

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பெருந்தோட்டக் கம்பனியின் தற்போதைய தலைவர் பெருந்தோட்டத் துறையில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட ஒருவராவார் என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி ஊழல், மோசடிகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்விசாரணையின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) மேற்படி விசாரணையில் குறித்த தலைவர் குற்றவாளியாகுமிடத்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி தலைவர் சமர்ப்பிக்கின்ற எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் கணக்கு அறிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி கம்பனியின் 2007- 2010 ஆண்டுகளினுள் இலாபம் ஈட்டிய தோட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) நட்டம் ஏற்பட்டிருப்பின் அந்த நட்டம் எவ்வளவென்பதையும்;

(iii) ஊழல் மற்றும் முறைகேடுகள் அதற்குக் காரணமாயமைந்ததா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) (i) மேற்படி கம்பனியின் பொருட்டு 'கோப்' அறிக்கையொன்றின் சிபார்சுக்கமைய நடவடிக்கை அலுவலகமொன்று நிறுவப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அது நிறுவப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி அலுவலகத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

1872/ '11

12.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கும் மிஹின் லங்கா விமான சேவைக்கும் சொந்தமான விமானங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி விமானங்களில், குத்தகை முறையில் பெறப்பட்டுள்ள விமானங்களின் எண்ணிக்கை விமான சேவையினடிப்படையில் வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி ஒவ்வொரு விமானத்துக்கும் மாதாந்தம் வழங்கப்படும் வாடகை வெவ்வேறாக யாது;

(iv) ஸ்ரீ லங்கன் விமான சேவை கடந்த மூன்று வருடங்களில் ஈட்டிய தேறிய வருமானம் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய, ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு எதிர்வரும் ஐந்து வருட காலப்பகுதிக்கும், மிஹின் லங்கா விமான சேவைக்கு எதிர்வரும் இரண்டு வருட காலப் பகுதிக்கும் கிடைக்கப்பெற்றுள்ள மூலதன முதலீட்டுப் பெறுமதி வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி மூலதன முதலீடுகளை இவ்விரு விமான சேவைகளினதும் மேம்பாட்டைக்கருதி ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அத்திட்டங்களை ஒவ்வொரு நிறுவனத்தினடிப்படையிலும் வெவ்வேறாக குறிப்பிடுவாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1900/ '11

13.

கௌரவ ஜோன் அமரதுங்க,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நூலகர் சேவை, மொழிபெயர்ப்பாளர் சேவை, சாரதி சேவை ஆகிய சேவைகள் தொடர்பாக செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்த இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளர் 2010.11.30 ஆம் திகதி தொடக்கம் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார் என்பதுடன், இதுவரை மேற்படி பதவிக்கு ஒருவரும் நியமிக்கப்படாமையின் காரணமாக மேற்படி சேவைகளுக்கான ஆட்சேர்ப்புகள், பதவி உயர்வுகள், இடமாற்றம், சேவைப் பிரமாணக் குறிப்புகளை தயார் செய்தல் மற்றும் திருத்தியமைத்தில் ஆகிய நடவடிக்கைகள் தாமதமடைவதையும், சில சேவைகளின் நடவடிக்கைகள் தடைப்பட்டிருப்பதையும் அவர் அறிவாரா?

(ஆ) (i) இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளரின் வெற்றிடமான பதவிக்கு தற்போது எவரேனும் நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர் யார் என்பதையும்;

(iii) மேற்படி நியமனம் மேற்கொள்ளப்பட்ட திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பதவிக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லையாயின் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்திகதி யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1901/ ’11

14.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஹொரவுபொத்தானை — கலென்பிந்துனுவெவ கிராமத்துக்கு மின்சாரம் பெற்றுத் தருமாறு அக்கிராமவாசிகள் கோரிவருவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கலென்பிந்துனுவெவ கிராமத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள உயர் அழுத்த மின்கம்பிகளிலிருந்து அக்கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கும்;

(ii) அதற்குரிய புதிய மின்மாற்றியை தாபிக்க வேண்டியதன் தேவையின் அடிப்படையில் அதனைத் தாபிப்பதற்கும்;

அவர் நடவடிக்கை எடுப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

1911/ ’11

15.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2001 இல் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய சுயமாக முன்வராதோர் மீளக்குடியமர்த்தல் கொள்கையின் (NIRP) கோட்பாடுகளின் பிரகாரம்;

(i) தவிர்க்க முடியாத காரணங்களின் நிமித்தம் மாத்திரமே சுயமாக முன்வராதோர் தொடர்பான மீள்குடியேற்றங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன என்பதையும்;

(ii) பாதிக்கப்பட்ட மக்களை முழுமையாக கலந்தாலோசித்ததன் பின்னரே மீள்குடியேற்றத்திற்கான இடம், வாழ்வாதாரம், நட்டஈடுகள், அபிவிருத்தி தொடர்பான விருப்பங்கள் ஆகியவற்றைத் தெரிவுசெய்தல் ஆகியவை நிர்ணயிக்கப்படுகின்றன என்பதையும்;

(iii) இந்த காணி, கட்டமைப்புகள், வாழ்வாதாரங்கள் போன்றவற்றைக் கவனத்திற் கொண்டு மாற்றீட்டுக் காணிகளை வழங்குதல் அல்லது நட்ட ஈடாக பணத்தை வழங்குதல், மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்

(iv) மாற்றீட்டுப் பெறுமதிகள் முழு காணிக்குமான நட்டஈடாக உடனடியாக வழங்கப்பட்டன என்பதையும்;

(v) காணிக்கான ஆவணப்படுத்தப்பட்ட உரித்தைக் கொண்டிராத மக்கள் நீதியாகவும் நேர்மையாகவும் நடத்தப்பட்டனர் என்பதையும்;

(vi) பாதிக்கப்பட்ட மக்கள் தம்மை மீள்கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்கப்பட்டதுடன் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் வசதிகள் செய்யப்பட்டன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010 சனவரி முதல் கொழும்பு மாநகர சபை பிரதேசத்தினுள் தேசிய சுயமாக முன்வராதோர் மீளக் குடியமர்த்தல் கொள்கைக்கு (NIRP) உடன்பட்ட சந்தர்ப்பங்களை நடைமுறைப்படுத்திய முகவராண்மைகளுடனும்;

(ii) ‘தேசிய சுயமாக முன்வராதோர் மீளக்குடியமர்த்தல் கொள்கை’ சகல மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதான நகரங்கள் ஆகியவற்றில் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— சிறப்புரிமை,— "Cabraal blames AG for delay in auditing EPF Accounts " என்ற தலைப்பின் கீழ் "தி ஐலண்ட்" பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிக்கை மூலமாக தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களால் 2012, சனவரி மாதம் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

3.

கௌரவ பைஸால் காசிம்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

" செய்யது சேஹுகோயா தங்கள் மௌலானா மன்றத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்

4.

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"பிலிப் குணவர்தன ஞாபகார்த்த சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு
சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பொது வழிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடனும் 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பொது வழிகள் சட்டத்தின் 13 ஆம் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 89 ஆம் பிரிவின் (2) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியின் கீழ், பாவனையாளர் கட்டண தேசிய பெருவழியில் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு வாகனத்தினதும் சாரதியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2011 நவெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1732/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.01.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதி கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 6.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 7.

கமத்தொழில் அமைச்சர்,— பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 யூலை மாதம் 27 ஆந் திகதிய 1716/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.12ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக

* 8.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 11.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

12.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.